JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.105/2021 Date:07.02.2025 P.W. 2 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. பூமணி |
| தந்தை பெயர், க/பெ | திரு. செல்லக்கண்ணு |
| முகவரி | |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 7th day of February 2025.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் மகள் அ.சா.1 மெர்லின் சென்னை குடும்ப நல நீதிமன்றதத்தில் விவாகரத்து மனுதாக்கல் செய்து விவாகரத்து உத்தரவு ஆகிவிட்டது என்றால் சரிதான் எந்த தேியில் ஆனது என்றால் எனக்கு நியாபகம் இல்லை மேற்படி இந்த உத்தரவு அ.சா.ஆ.1 மெர்லின் க்கு தெரியும் என்றால் சரிதான். விவாகரத்து ஆன பின்னர் அவர் நீதிமன்றதத்திற்கு வந்த சாட்சியம் அளித்தார் என்றால் சரியல்ல. 2ம் எதிரி என் மீது 20.09.2019 தேதி அன்று விருக்கம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நான் விசாரணைக்காக ஆஜர் ஆகி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என் மீதும் அ.சா.1 மீதும் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பெருக்குடியில் இருந்து வந்த என்னுடைய மகளை நான் தான் எனது வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றால் நான் அழைத்து வரவில்லை என் மகள் அவராகவே வந்து விட்டார். கடந்த 28.11.2019 அன்று இரவு என் மகளை அடித்து கொடுமைபடுத்தியதாக கூறி அவரே என் வீட்டிற்கு வந்து விட்டார். 15.12.2019 தேதியன்று நானும் என் மகளும் மகன் எபி மற்றும் இருவர் ஆகியோர்கள் எதிரியின் வீட்டிற்கு சென்று வாகனத்தின் மூலமாக அ.சா.1ன் பொருட்கள் அனைத்தையும் எடுத்து வந்துவிட்டோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகக்கு 8 ஆப்பிரேசன் செய்திருப்பதாக கூறியுள்ளோம் என்றால் எனது மகளிடம் 1ம் எதிரி கூறியுள்ளார் அவர் கூறி நான் தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரிக்கு அவ்வாறு எந்த அறுவை சிகிச்சையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய

இரட்டை பெண் குழந்தைகளுக்கு பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டபோது யார் யார் வந்தார்கள் என்றால் 1ம் மற்றும் 2ம் எதிரி வந்தார்கள். எந்த இடத்தில் பிறந்தநாள் விழா நடைபெற்றது என்றால் என் வீட்டில் வைத்து தான் நடைபெற்றது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருவரும் என்னுடைய பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். 3ம் எதிரி ஈஸ்ட் டைசன் என்பவரும் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டார்களா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நான் கூறியது போல் அ.சா. 1ம் இருந்து நகை எதையும் எதிரிகள் பிடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. என் மகன் எபி என்பவருக்கு 25.08.2019 ல் திருமண நிச்சம் ஏற்படுத்தப்பட்டது அது நாள் வரையிலும் நல்ல உறவு முறையில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அவரது குடும்ப சூழ்நிலைகாக அவரது வீட்டை விற்றார் என்றாலும் அதை விற்க விடாமல் தடுக்கவேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்த தற்பொழுது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வீட்டை விற்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் வரை 1ம் எதிரியும் நான் என் மகளும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் வழக்கிற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றாலும் நான் பொய் சங்கதிகள் கூறி தான் புகார் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வாய்ஸ் ரெக்கார்டு முழுமையாக இல்லை என்றாலும் எங்களுக்கு தேவையான பகுதி மட்டும் எடுக்கப்பட்டு ஆவணம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் எதிரி அவரது மனைவி மற்றும் குழந்தைகளுடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றால் எனக்கு விருப்பமில்லை.

Typed to my dictation in open Court.
Reஶீad over to the witness and admitted
by the witness as correct.

JudicialMagistrate,
Ambattur